பள்ளியில் இடம் இல்லாமல், இன்றைக்கு உட்காருவதற்குகூட இடம் இல்லாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பெண்களுக்காக, அந்தப் பள்ளியில் உள்ள பெண்களைக் காக்கின்ற காவல் தெய்வத்தினுடைய இந்த நல்ல ஆட்சியில் சரி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவினையும், பரிசீலனையையும் வழங்குவார்களா என மீண்டும் தயவு கூர்ந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் எல்லா வசதிகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தொலைநோக்குத் திட்டத்தோடு பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 76, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

76—

இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிலம் ஒதுக்குதல்.

24790—திரு.* **கி. தருமலிங்கம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளி, ஒனறியத் துவக்கப்பள்ளியில் நடந்து கொண்டு வருவதால், அப்பள்ளிக்காக 4.90 ஏக்கர் பரப்புள்ள கிராம புலன் எண். 184/1 அரசு புறம்போக்கு இடத்தை வருவாய்த் துறையிலிருந்து கல்வித்துறைக்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அணைக்கட்டு தொகுதி இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளிக்காக 4.90 ஏக்கர் பரப்புள்ள கிராம புல எண். 184/1 அரசு புறம்போக்கு இடத்தை, வருவாய்த் துறையிடமிருந்து, கல்வித் துறைக்கு நில மாற்றம் செய்வதான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1995 மார்ச் 20]

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழனியிலிருக்கும் குழந்தைகளையெல்லாம் கல்விச் சாலைகளில் வீற்றிருக்கும் நிலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு குறிப்பாக என்னுடைய அணைக்கட்டுத் தொகுதியில் மட்டும் 45 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் குழந்தைகள் கல்வியில் உயர்ந்து நிற்கும் இந்த நிலையில், இந்த இடையஞ்சாத்து கிராமத்தில் இருக்கும் தொடக்கப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளி நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு இடம் போதவில்லை. தொடக்கப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட முடியாது. எனவே, அந்த கிராமத்தில் இருக்கும் புல எண். 184/1-ல் 4.90 ஏக்கர் நிலம் இருக்கிறது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த இடத்தினை நமது வருவாய்த்துறையிலிருந்து கல்வித் துறைக்கு விரைவாக மாற்றம் செய்து அந்த இடத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு உடனடியாக ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய இறுதி ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணை வருவாய்த் துறையிலிருந்து விரைவாகக் கிடைத்தால் கூடிய விரைவில் பள்ளிக் கட்டிடம் கட்ட முடியும் என்பதற்கு முன்பாக இந்த இடத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டு திட்டத்திலே பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் முன்னாளைய ஆட்சியாளர்கள் சில ஆக்கிரமிப்பாளர்கள் அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தார்கள் அந்த இடத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விரைவாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தார்கள்--நானே சென்ற மாதம் சென்று பார்த்தேன்--அந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றிவிட்டு ஒரு பள்ளிக் கட்டிடம் பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இன்று கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் தொந்தரவுக் கொடுக்காத நிலைமையை ஏற்படுத்துவதற்கு வருவாய்த்துறையிலிருந்து கல்வித் துறைக்கு உடனடியாக மாற்றம் செய்து அதை பள்ளிக்கே ஒப்படைக்குமாறு விரைவாக ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 77, திருமதி என் கனகவல்லி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.